# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 15/ந/2026, நாள் 11.03.2026.

மும்மது ரஃபீக்
கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கீழக்கரை நகராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை, ஜின்னா தெரு, எண்.11/61 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முஹம்மது ரஃபீக் என்பவரது 04.12.2025 நாளிட்ட புகார் மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 02.01.2026 அன்று பெறப்பட்டு, 15/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை, ஜின்னா தெரு, எண்.11/61 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முஹம்மது ரஃபீக் என்பவரின் 04.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகரில் "பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களான கடற்கரை பகுதியில் பொதுக் கழிப்பறை மற்றும் நிழற்குடில்கள் அமைக்க கோரி கீழக்கரை நகராட்சி நிர்வாகத்தில் பலமுறை பல மாதங்களாக கோரிக்கை வைத்ததில் அதை அலட்சியப்படுத்தி பொறுப்பில்லாத பதிலை மனுதாரருக்கு கொடுக்கின்றனர்.

**நகராட்சி நிர்வாகத்தால் மனுதாரருக்கு கொடுத்த பதில்**

கீழக்கரை கடற்கரை பகுதியில் நகராட்சி நிர்வாகத்திற்கு சொந்தமான இடங்கள் ஏதுமில்லை, அப்பகுதி கடல் வளத் துறைக்கு சொந்தமானது அதனால் அப்பகுதியில் கழிப்பறை ஏதும் கட்ட இயலாது என்றும், அதே பகுதியில் இருக்கைகள், தெரு விளக்குகள் மற்றும் CCTV வசதிகளுடன் "எனது கிராமம் திட்டம் 2024 – 25'' ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் பதில் கொடுத்துள்ளார்.

**மனுதாரர் வைக்கும் கோரிக்கை**

எனது கிராமம் திட்டத்தில் 2024-2025-ன் கீழ், மேற்கொள்ளப்படவுள்ள இருக்கைகள், தெருவிளக்குகள் மற்றும் CCTV வசதிகளுடன், "சுற்றுலா பயணிகள் நிழலில் ஒதுங்குவதற்கும் அமர்வதற்கும் குறைந்தது இரண்டு நிழற்குடில்களாவது அமைக்க வேண்டியும்,

அதே கடற்கரை மணற்பகுதியின் முகப்புப் பகுதியானது 5 அடி உயரம் மேட்டுப் பகுதியாக இருந்து வருவதும், அப்பகுதியில் இருக்கும் பேரிச்சம் பழம் மரம் அருகில் போதுமான அளவு கழிப்பறைகள் கட்ட இடம் இருந்து வருவதனால், அப்பகுதியில் கழிப்பறைகள் கட்டலாம் அல்லது

FRP ரெடிமேட் கழிவறைகள் அமைத்து கழிவுகளை Bio Digester தொழில் நுட்பமுறையில் அருகிலேயே சுத்தரிக்கலாம்.

மேற்சொன்ன இதுபோன்ற கட்டுமான வசதிகளுக்கு (CRZ) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் அனுமதியளித்து, அதற்குண்டான வழிகாட்டி முறைகளையும் மத்திய அரசு இதழில் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், கடற்கரைப்பகுதி இடத்தின் உரிமைதாரராக நிலநிர்வாகத் துறை இருந்து வருவதனால் அதற்கு பொறுப்புதாரியான மாவட்ட ஆட்சியர், (CRZ) கடலோர ஒழுங்குமுறை மண்டல உறுப்பினராகவும் இருந்து வருகிறார். தேவையெனில் மாவட்ட ஆட்சியரிடம் அதற்குண்டான வழிகாட்டுதல்களை பெற்று மேற்சொன்ன கோரிக்கைகளை பொதுமக்களுக்காகவும், சுற்றுலா பயணிகளுக்காகவும் நிறைவேற்றித்தரும்படி நகராட்சி நிர்வாகத்திற்கு உத்திரவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

2) மேலும் மனுதாரரின் 04.12.2025 நாளிட்ட மற்றொரு கடிதத்தில் கீழ்க்காணும் புகார்களையும் தெரிவித்துள்ளார்:

"இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகரில் "பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களான கடற்கரை பகுதியில் 17வது வார்டு பகுதிக்குட்பட்ட இடத்தின் சிறு கோபுரமின்விளக்குகளை பழுது நீக்குவது குறித்து கீழக்கரை நகராட்சி நிர்வாகத்தில் பலமுறை பல மாதங்களாக கோரிக்கை வைத்ததில் அதை அலட்சியப்படுத்தி 03.12.2025 இன்றுவரை 10 மாதங்களாக நடவடிக்கை ஏதும் எடுக்காமல் ஏமாற்றும் விதமாக பொய்யான பதிலை மனுதாரருக்கு கொடுக்கின்றனர்.

ஆகவே உள்ளாட்சி முறைமன்ற நடுவரான தாங்கள் மேற்சொன்ன கோரிக்கையை பொதுமக்களுக்காகவும் சுற்றுலா பயணிகளுக்காகவும் நகராட்சியின் அன்றாட பணிகளை சரிவர நிறைவேற்றித்தரும்படி நகராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

3) முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கீழக்கரை நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

4) எதிர்மனுதாரரான கீழக்கரை நகராட்சி ஆணையரின் 12.02.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.119/2026/அ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்.

"கீழக்கரை நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இதன் மக்கள் தொகை 50,114 ஆகும். இதன் மொத்த பரப்பளவு 2.459 ச.கிமீ ஆகும்.

அ) மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் நகராசிக்கு சொந்தமான இடம் கிடையாது. மேலும், இப்பகுதி Coastal Regulation Zone (CRZ) பகுதியாகும். மேலும், கீழக்கரையின் கழிவு நீர் கடலில் கலப்பதால் தேசிய பசுமை தீர்ப்பாய நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இதனால் மனுதாரர் கூறியுள்ள இப்பகுதியில் கழிப்பிட வசதி அமைக்க இயலாது. இந்நகரின் செல்வந்தரான திரு. சையது முகமது சலாகுதீன் என்பவர் எனது கிராமம் திட்டத்தில் ரூ.25 லட்சம் நிதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் செலுத்தப்பட்டு, அத்தொகையில் இந்நகரில் முக்கியமான நான்கு பணிகள் தேர்வு செய்து, அதில் ஒரு பணியாக மேற்படி இடத்தில் இரவு நேரங்களில் இப்பகுதியில் சட்டத்துக்கு புறம்பான காரியங்கள் நடைபெறுவதால், சட்டம் ஒழுங்கை கருத்தில் கொண்டு சிறப்பினமாக கருதி சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டும், Benches மற்றும் மின்விளக்கு வசதி, மரங்கள் முதலியன வைப்பதற்கு மேற்படி செல்வந்தர் அவர்களால் நிதி உதவி அளித்து இப்பணிகளுக்கு பரிந்துரை செய்ததின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது.

மேலும், இப்பகுதி சுற்றுலா தளமும் கிடையாது. இப்பகுதியில் உள்ளூர் வாசிகள் மட்டுமே வந்து செல்லும் இடமாகும் என்ற விவரம் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ) மனுதாரர் திரு. முஹம்மது ரஃபீக் என்பவரின் 04.12.2025-ந் தேதிய மனுவில் குறிப்பிடபட்டுள்ள இந்நகராட்சிக்குட்பட்ட 17 வார்டில் உள்ள சிறுகோபுர மின்விளக்கு பழுதுநீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் எரியூட்டப்பட்டுள்ளது என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட விபரத்தினை மனுதாரர் திரு. முஹம்மது ரஃபிக் என்பவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கீழக்கரை நகராட்சி ஆணையர் ஆகியோரை 03.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. முஹம்மது ரஃபீக் என்பவர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"கீழக்கரை கடற்கரைப்பகுதியில் சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களில் அவர்களின் பயன்பாட்டுக்கு பொதுக்கழிப்பறை மற்றும் நிழற்குடில்கள் அமைக்கப்படவில்லை. பொதுக்கழிப்பறை அமைப்பதற்கான இடவசதி கடற்கரையில் உள்ளது. பொதுக்கழிப்பறை கட்டுவதற்கு வசதியாக போதுமான இடவசதி உள்ளது. மேலும் மேற்சொன்ன இடத்தில் பொதுக்கழிப்பறை அமைப்பதற்கு கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ)–ல் சட்ட அனுமதி உள்ளது. கழிப்பறையின் கழிவுகளை கடலில் நேரடியாக கலக்கச் செய்யாமல் Bio-Digester முறையில் சுத்திகரிப்பு செய்து கழிப்பறையை அமைப்பதற்கு வேண்டுகிறேன்.

(அல்லது)

மேற்சொன்ன இடத்திலிருந்து சுமார் 30 மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கும் நகராட்சிக்கு சொந்தமான ஜின்னா தெரு (பனங்காட்டு ஆதி திராவிடர் தெரு) கழிப்பறைகள் யாருக்கும் பயன்படாமல் இருந்து வருகிறது. அவற்றை மராமத்து செய்து அக்கழிப்பறைக்கு செல்லும் கடற்கரை பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மற்றொரு பொதுப்பாதையை சீரமைப்பு செய்து கடற்கரையிலும், பேருந்து நிறுத்தத்திலும் வழிகாட்டி பலகை பொருத்தி மேற்சொன்ன கோரிக்கையை நிறைவேற்றி தரும்படி இம்முறைமன்ற நடுவத்தில் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரையில் ஆறு கோபுர மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று மின்விளக்குகளினால் போதுமான வெளிச்சம் கடற்கரைக்கு கிடைக்கிறது. மீதி மூன்று விளக்குகள் போதுமான வெளிச்சத்தை வழங்கவில்லை. அதையும் சரிசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழிவுநீர் கால்வாய் அமைக்கப்படவில்லை. கழிவுகளை வெளியேற்றுவதற்கு தற்காலிகமாகவாவது ஏற்பாடுகள் செய்து கொடுக்க இம்முறைமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்."

6) எதிர்மனுதாரரான கீழக்கரை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 119/2026/அ1, நாள் 02.03.2026–ல் 03.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு கீழக்கரை நகராட்சி பொறியாளர் திரு. அ. அருள் என்பவர் ஆஜராக உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணயில் கீழக்கரை நகராட்சி பொறியாளர் திரு. அ. அருள் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள கடற்கரைப் பகுதி நகராட்சிக்கு சொந்தமானது அல்ல. இப்பகுதி Coastal Regulation Zone (CRZ) பகுதியாகும். மேலும் மேற்காணும் பகுதியில் கழிவுநீர் கடலில் கலப்பதாக செய்தி வெளியானதால், தேசிய பசுமை தீர்ப்பாய நீதிமன்றம் தானாக முன்வந்து இப்பொருள் தொடர்பாக வழக்கு தொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது. அதற்கான ஆவணத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்.

அனைத்து கழிவுநீர்களும் கடலில் வந்து கலக்கிறது. கசடு, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) கட்ட இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அரசிடம் உரிய அனுமதி பெற்று சுத்திகரிப்பு

நிலையம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டு கேட்கும் இடத்தில் நகராட்சி அனுமதி எதுவும் பெறாமல் பெட்டிக்கடை ஒன்றை ஆக்கிரமிப்பு செய்து வைத்துக்கொண்டும், தனது கடைக்கு வெளிச்சம் வேண்டும் என்பதற்கு யாதொரு அனுமதியின்றி தெருவிளக்கு ஒன்றும் அமைத்துள்ளார். அதனை கேட்கும்பொழுது நான் ஒரு சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர் எனக்கூறி ஆக்கிரமிப்பை அகற்ற மறுத்தும், மேலும் தனது பெட்டிக்கடை நடத்துவதற்காக அவ்விடத்தில் பொதுமக்கள் கூடுவதற்கு தகுந்தாற்போல் பணிகள் மேற்கொள்ள வற்புறுத்தி வருகிறார் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஜின்னா தெரு (பனங்காட்டு ஆதி திராவிடர் தெரு) பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் தற்போது பொதுமக்கள் பயன்படுத்தவில்லை. தற்போது நகராட்சிப்பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளதால் அந்த பொதுக்கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்படுத்துவதில்லை. மேலும் பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாததால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு ரேஷன் கடை கட்டுவதற்கு (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்) சட்டமன்ற உறுப்பினரிடம் நிதி கேட்கப்பட்டுள்ளது என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்."

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான கீழக்கரை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் கீழக்கரை கடற்கரைப் பகுதியில் பொதுக்கழிப்பறை அமைப்பதற்கான கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (Coastal Regulation Zone (CRZ) ) சட்ட அனுமதி மற்றும், அதற்குண்டான வழிகாட்டி முறைகளை மத்திய அரசு இதழில் வெளியிட்டுள்ளதால், அதன்படி பொது மக்களின் பயன்பாட்டிற்கு பொதுக்கழிப்பறை அமைக்க வேண்டும் என்பதும், CCTV வசதியுடன் நிழற்குடில்கள் அமைக்க வேண்டும் என்பதும், கழிப்பறை கழிவுகள் கடலில் நேரடியாக கலக்காதவாறு FRP ரெடிமேட் கழிவறைகள் அமைத்து கழிவுகள் Bio-Digester முறையில் சுத்திகரிப்பு செய்யும் வகையில் கழிப்பறை அமைக்க வேண்டும் என்பதும், ஜின்னா தெருவில் அமைந்துள்ள கழிப்பறைகள் பயன்படுத்தப்படாமல் உள்ளதால் அக்கழிப்பறையில் மராமத்து பணிகள் மேற்கொண்டு அக்கழிப்பறைக்கு செல்லும் கடற்கரை பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள பொதுப்பாதையை சீரமைப்பு செய்து கடற்கரையிலும், பேருந்து நிறுத்தத்திலும் வழிகாட்டி பலகை பொருத்திட வேண்டும் என்பதும், கடற்கரை பகுதியில் 17வது வார்டு பகுதிக்குட்பட்ட இடத்தில் சிறுகோபுர மின்விளக்குகள் பழுது நீக்கம் செய்ய வேண்டும் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

கீழக்கரை இரண்டாம் நிலை நகராட்சி மொத்த பரப்பளவு 2.459 ச.கிமீ அளவு கொண்டது என்பதும், இதன் மக்கள் தொகை 50,114 என்பதும், நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளதால் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள பொதுக்கழிப்பறையை பொதுமக்கள் பயன்படுத்துவதில்லை என்பதும், பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு ரேஷன் கடை கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் சட்டமன்ற உறுப்பினரிடம் நிதி கோரப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரால் குறிப்பிட்டுள்ள பகுதி Coastal Regulation Zone (CRZ) என்பதும், கழிவுநீர் கடலில் கலப்பதாக வெளிவந்த செய்தியை தொடர்ந்து தேசிய பசுமை தீர்ப்பாய நீதிமன்றம் தானாக முன்வந்து தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், எனது கிராமம் திட்டத்திற்கு திரு. சையது முகமது சலாகுதீன் என்பவரால் வழங்கப்பட்ட ரூ.25 லட்சம் நிதியில் கீழக்கரை நகரில் முக்கிய நான்கு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதும், இரவு நேரங்களில் சட்டத்துக்கு புறம்பான காரியங்கள் நடைபெறுவதால், சட்டம் ஒழுங்கை கருத்தில் கொண்டு இப்பகுதியில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டும், Benches மற்றும்

மின்விளக்கு வசதி, மரங்கள் முதலியென வைப்பதற்கு சிறப்பினமாக கருதி, மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி பெற்று பணிகள் நடைபெற்றுவருகிறது என்பதும், இந்நகராட்சியின் 17 வார்டில் உள்ள சிறுகோபுர மின்விளக்கு பழுதுநீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் எரியூட்டப்பட்டுள்ளது என்பதும், அனைத்து கழிவுநீர்களும் கடலில் வந்து கலப்பதால், இரண்டு ஏக்கர் நிலத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க அரசிடம் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், எதிர்மனுதாரரான கீழக்கரை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள பொருள் தொடர்பாக மாண்பமை தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், சென்னை தானாக முன்வந்து தொடரப்பட்ட வழக்கு Original Application No.01 of 2025 (SZ) நிலுவையில் உள்ளது என்ற விவரம் அறியவருவதால், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10. (3) (b)-ல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

பிரிவு 10. (3) முறைமன்ற நடுவர், –

(a) xxxxx

(b) 1952-ஆம் ஆண்டு விசாரணைகளின் ஆணையச் சட்டத்தின்படி ஆணையிடப்பட்டிருக்கின்ற விசாரணை தொடர்பான பொருட்பாடு எதனையும் அல்லது நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும்,

(c) xxxxx

தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்தல் கூடாது.

மேற்காணும் சூழ்நிலையில், மனுதாரரின் புகார் தொடர்பான பொருட்பாடு மாண்பமை தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயம், சென்னை முன் நிலுவையில் உள்ளதால், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் விசாரித்தலாகாது என்பதால், இப்புகார் மனுமீதான நடவடிக்கை மேற்கொள்ள சட்டத்தில் வழிவகை இல்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. முஉறம்மது ரஃபீக்,
11/61, ஜின்னா தெரு,
கீழக்கரை,
இராமநாதபுரம் மாவட்டம் – 623517.

2) நகராட்சி ஆணையர்,
கீழக்கரை நகராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/3/26
செயலாளர்.